# முதல் இடைப் பருவத் தேர்வு -2024

## திருப்பத்தூர் மாவட்டம்

**வகுப்பு : 12 தமிழ் மொத்த மதிப்பெண்கள் 50**

## விடைக் குறிப்பு

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி 8X1=8**

1. இ) தொல்காப்பியம்
2. இ) அடி எதுகை, சீர் எதுகை
3. ஆ) ஏப்ரல் 22
4. ஈ) 2 1 3 4
5. அ) ஐப்பசி, மார்கழி
6. ஈ) இவை அனைத்தும்
7. இ) உருவகம், வினைத்தொகை
8. ஆ) பொருட்குறிப்பு
   பகுதி –ஆ பிரிவு -1

**எவையேனும் மூன்றனுக்கு விடையளிக்க 3X2=6**

9. **நடை அழகியல் பற்றித் தொல்காப்பியத்தின் கருத்தைக் குறிப்பிடுக.**
☐ 'நடைபெற்றியலும்' என்றும் 'நடை நவின்றொழுகும்' என்றும் சில சொற்றொடர்களைத் தொல்காப்பியம் கையாண்டிருக்கிறது.

- ஆசிரிய நடைத்தே வஞ்சி: ஏனை வெண்பா நடைத்தே கலி என்றும் சொல்லுகிறது.
- நடை என்ற சொல், தெளிவான பார்வையோடு தொல்காப்பியத்தில் இடம் பெறுகின்றது.

10. கார்பன் டை ஆக்சைடு, மீத்தேன், நைட்ரஸ் ஆக்சைடு, ஓசோன், நீர்வாயு

11. **எதிர்பாராத நிகழ்வுகளை ஜமாலுத்தீன் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?**
☐ ஆனந்தம், சோர்வு, அற்பத்தனம் இவை எல்லாம் எதிர்பாராத நிகழ்வுகள்.

- இவை எதிர்பாராத, அழையாத விருந்தாளிகள் என்று உருவகப்படுத்துகிறார்.

12. திருமணம் செய்த பின்னரும் தன் இல்லத்திலேயே தொடர்ந்து வாழ்க்கை நடத்தும் தாயமுறை

    தாய்வழி குடும்பங்களில் பெண்களே குலத்தொடர்ச்சி உரிமை

    தாய்வழி முறையில் குடும்பச் சொத்து மற்றும் செல்வங்கள் பெண்களுக்கே சென்று சேரும்.

    உரிமை போன்றவை சங்க காலத்தில் தாய்வழிச் சமூக முறையில் பெண்கள் பெற்றிருந்த

    உரிமைகள் ஆகும்.

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3X2=6

13. **நிலையாமை குறித்து, சவரி உரைக்கும் கருத்து யாது?**
☐ இராமனைக் கண்டதால், தன்னுடைய பொய்யான உலகப் பற்று அழிந்தது.
தான் மேற்கொண்டிருந்த தவம் பலித்தது.
தன்னுடைய பிறவியும் ஒழிந்தது என நிலையாமையை பற்றி உரைக்கிறாள்.

14. **களம் - கலம்**
ஆடுகளம் இருந்த இடத்தில் அணு ஆலைக்கான உலைக்கலம் அமைத்தனர்.

அல்லது

**அலை, அளை, அழை**
அலைவீசி அளை உடைகிறது. பாம்பு வெளியில் வந்தால் ஆபத்து என அன்னை அழைக்கிறாள்.

15. **பொலிந்தான் - பொலி +த்(ந்) + த் + ஆன்**
பொலி - பகுதி
த் - சந்தி
ந் - ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி அல்லது

**வியந்து - விய+ த்(ந்) +த் +உ**
விய - பகுதி
த் - சந்தி
ந் - ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

16. **வானமெல்லாம் - வானம் +எல்லாம்**
உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே - வானமெல்லாம்

அல்லது

**புதுப்பெயல் - புதுமை+ பெயல்**
ஈறுபோதல் - புது +பெயல்
இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் - புதுப்பெயல்

17. அ) A new language is a new life
ஒரு புதிய மொழி என்பது ஒரு புதிய வாழ்க்கை

ஆ) The limits of my language are the limits of my world.
என் மொழியின் எல்லை உலகத்தின் என் எல்லை

18. அ) காலையில் பூத்த மல்லிகை மணம் வீசியது.

ஆ) அவருக்கு நல்லனவும் கெட்டனவும் நன்றாகத் தெரியும்

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3X4=12**

**19. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.**
□ எந்த ஒரு தொன்மையான மொழியும் சைகைகளிலிருந்தும் இசையிலிருந்தும்தான் தொடங்கி இருக்கின்றன.

- இதற்கு சங்கப் பாடல்களே சிறந்ததொரு சான்றாகும்.
- "கடந்தடு தானை மூவிருங்கூடி

உடன்றனிர் ஆயினும் பறம்பு கொளற்கரிதே" இப்புறநானூற்று பாடலில், பாரியின் பறம்பு மலையை மூவரும் சேர்ந்து வந்தாலும் அடைய இயலாது. இரவலர் போல் பாடி பரிசில் பெற வந்தால் பெறலாம் என்ற கருத்தை வன்மையாக உரைக்கிறது. இப்பாடலில் வல்லின எழுத்துகள் மிகுதியாகப் பயின்று வந்து ஒலியால் நிறைந்திருக்கின்றது.

www.Padasalai.Net

- "படாஅம் ஈத்த" எனும் புறநானூற்றுப்பாடலில் அளபெடையாலும், "புணரின் புணராது" எனும் பாடலில் அணியாலும், "நுந்தை தந்தைக்கு" எனும் பாடலில் மெல்லினம், சீர் எதுகையால் நிரம்பி வந்து ஒலிக்கோலங்களுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன.
இவ்வாறு சங்கப்பாடல்களில் ஒலிக்கோலங்கள் ஒரு குறிப்பிடத்தக்க பண்பாக விளங்குகின்றன.

20. **வாடைக்காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?**
- உலகம் குளிருமாறு புதிய மழையானது பொழிந்துக்கொண்டிருக்கிறது.
- தாழ்வான பகுதிகளில் எல்லாம் நீரானது நிரம்பி வருவதால்,
- கோலையுடைய ஆயர், அவ்விடத்தை வெறுத்துவிட்டு, மேடான இடம் நோக்கி தன் ஆடு, மாடு, எருமை, பசுக்களை ஓட்டிச்செல்கின்றனர்.
- எப்பொழும் மேயச்சலுக்கு வந்துக்கொண்டிருந்த பழைய இடத்தை மழையின் பொருட்டுவிட்டுவிட்டு, வேறு இடம் நோக்கி செல்வதை சங்கடமாகக் கருதினார்கள்.
- அவர்கள் சூடிய காந்தள் மலர் மழைநீர் சொட்டி சொட்டி கசங்கி இருந்தது.
- குளிரை போக்கிக்கொள்ள ஆயர்கள் கூட்டமாக அமர்ந்து நெருப்பு மூட்டி குளிர் காய்ந்தனர். குளிரால் அவர்கள் பற்கள் நடுங்கின.
- இவ்வாறு வாடை காலத்தில் கோவலர்கள் தன்னை பாதுகாத்துக்கொண்டனர்.

21. **தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை?**
- காலையில் எழுந்து, என்னுடைய வேலையை யாரையும் எதிர்ப்பார்க்காமல் நானே செய்துக்கொள்வேன்.
- என் தந்தைக்கும், தாயுக்கும் ஏதேனும் வேலையை செய்து உதவியாக இருப்பேன்.
மாலையில் பள்ளி விட்டு வீடு திரும்பிய நான், உடைமாற்றி கைகால், முகம் கழுவிவிட்டு பாடம் படிப்பேன்.
- அம்மாவிற்கு உதவியாக அவர்கள் வந்தவுடன் சாப்பிடுவதற்கு சிற்றுண்டி எடுத்து வைப்பேன்.
- என் அப்பா வந்தவுடன் அவர் கொண்டு சென்ற உணவு பாத்திரங்களை கழுவி வைப்பேன்.
- சமைத்த உணவை சாப்பிடுவதற்கு உணவு மேசைக்கு கொண்டுவந்து வைப்பேன்.
- அனைவரும் சாப்பிட்ட பிறகு, பாத்திரத்தை கழுவும் இடத்தில் கொண்டு போடுவேன்.
- விடுமுறையில் என் பெற்றோரின் அனுமதியுடன் பக்கத்து வீட்டிற்கு விளையாடச்செல்வேன்.
- மொத்தத்தில் தொல்லை தராத நல்லப்பிள்ளையாக நடந்துக்கொள்வேன்.

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2X4=8**

22. **குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வினை விளக்கி எழுதுக.**
- இராமன், வீடணனுக்கு முடிசூட்டி மகிழ்ந்த தருணத்தில், குகனுடன் சேர்ந்து நாங்கள் ஐவர் ஆனோம்.
பின்னர், கதிரவன் மகனாகிய சுக்ரீவனுடன் அறுவர் ஆனோம்.
- உள்ளத்தில் அன்புகொண்டு எங்களிடம் வந்த அன்பனே, உன்னுடன் சேர்ந்து எழுவர் ஆனோம் என்றார்.
- உன் தந்தையராகிய தயரதனுக்கு, இதனால் கூடுதல் புதல்வர்கள் கிடைத்ததால் பெருமை அடைகிறார்.
- இவ்வாறு இராமன் வீடணனையும் தன் தம்பியாகக் கொண்டு பெருமை அடைகிறார்.

23. **பொருள் வேற்றுமை அணியை விளக்குக.**
**அணி** : செய்யுளில் இருபொருளுக்கு ஒப்புமைக் கூறி அவற்றில் ஒன்றிலிருந்து ஒன்றை வேறுபடுத்திக்காட்டுவது வேற்றுமை அணி ஆகும்.
**எ - கா:** ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி --- தண்டியலங்காரப்பாடல்.
**விளக்கம்:** மலையிடை தோன்றி, உயர்ந்தோர் தொழவிளங்கி உலகின் புற இருளை சூரியனும், அக இருளை தமிழும் போக்கும் தன்மை உடையன. தமிழுக்கு இணை எதுவுமில்லை.
**பொருத்தம்:** தமிழும், சூரியனும் இருளைப்போக்குவன என்று அதன் ஒத்தத்தன்மையைக் கூறி, தமிழுக்கு ஈடு இணை இல்லை என்று ஒன்றினை வேறுபடுத்திக்காட்டுவதால், இப்பாடல் பொருள் வேற்றுமையணிக்கு பொருத்தமாக அமைகிறது.

24. **காலை எழுந்து படித்து நமக்கு நன்மை ஏற்படும்**
காலையில் எழுந்து படித்தால் நமக்கு நன்மை ஏற்படும்.

**மாறன் பேச்சுத்திறன் யார் வெல்ல முடியும்**
மாறன் பேச்சுத்திறனை யாரால் வெல்ல முடியும்.

**சான்றோர் மதிப்பு கொடுத்து வாழ்வு உயரலாம்.**
சான்றோருக்கு மதிப்பு கொடுத்து வாழ்வில் உயரலாம்

**குமரன் வீடு பார்த்தேன்.**
குமரனை வீட்டில் பார்த்தேன்.

25. இலக்கிய நயம் மையக் கருத்தோடு ஏற்புடைய நயங்கள் நான்கினை முழு மதிப்பெண் வழங்கலாம்.

26. அ) முன் - அவன் முன்வந்து கூறினான்
அவன்முன் வந்து கூறினான்
ஆ) தானே - இராமன் தானே பாடினான்!
இராமன் தானேபாடினான்

இ) கொண்டு - கத்திக்கொண்டு மரத்தை வெட்டினான் (சத்தம்)
கத்தி கொண்டு மரத்தை வெட்டினான் (கருவி)
ஈ) விட்டான் - அவன் தெருவில் போய் விட்டான்
அவன் தெருவில் போய்விட்டான்

**ஏதேனும் ஒன்றனுக்கு விடை தருக.** **1X6=6**

27. உலகம் குளிருமாறு புதிய மழையானது பொழிந்துக்கொண்டிருக்கிறது.

- தாழ்வான பகுதிகளில் எல்லாம் நீரானது நிரம்பி வருவதால்,
- கோலையுடைய ஆயர், அவ்விடத்தை வெறுத்துவிட்டு, மேடான இடம் நோக்கி தன் ஆடு, மாடு, எருமை, பசுக்களை ஓட்டிச்செல்கின்றனர்.
- எப்பொழும் மேயச்சலுக்கு வந்துக்கொண்டிருந்த பழைய இடத்தை மழையின் பொருட்டுவிடடுவிட்டு, வேறு இடம் நோக்கி செல்வதை சங்கடமாகக் கருதினார்கள்.
- அவர்கள் சூடிய காந்தள் மலர் மழைநீர் சொட்டி சொட்டி கசங்கி இருந்தது.
- குளிரை போக்கிக்கொள்ள ஆயர்கள் கூட்டமாக அமர்ந்து நெருப்பு மூட்டி குளிர் காய்ந்தனர்.

குளிரால் அவர்கள் பற்கள் நடுங்கின.
பசுக்கள் விலங்குகள் மேய்ச்சலை மறந்தன.
குரங்குகள் குளிரால் நடுங்கின.
புறவைகள் குளிரால் தமது சிறகுகளையும் விரிக்க இயலாமல் கீழே விழுந்தன.
கறவைப் பசுக்கள் கன்றுகளைப் பால் உண்ண விடாமல் உதைத்து தள்ளின.

- இவ்வாறு வாடை காலத்தை நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறது.

28. **குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது - எவ்வாறு? விளக்குக.**

□ **முன்னுரை:**
□ குடும்பம் என்ற உயரமைப்பின் மூலமே உலகச்சமூகம் இயங்குகிறது.
□ சங்க காலத்தில் குடும்ப அமைப்பு மேலோங்கிய ஒன்றாக இருந்தது.
□ குடும்பம் தொடங்கிக் குலம், கூட்டம், பெருங்குழு, சமூகம், என்ற அமைப்புவரை விரிவு பெறுகிறது.

□ **குடும்பம் :**
□ குடும்பம் எனும் அமைப்பு ஏற்படுவதற்கு அடிப்படை திருமணமே.
□ 'திருமணம்' ,'குடும்பம' ஆகிய இரண்டு சொற்களும் தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்களிலும் எங்கும் இடம்பெறவில்லை.
□ குடும்பம் எனும் சொல் முதன்முதலில் திருக்குறளில்தான் வருகிறது.
□ சங்க இலக்கியத்தில் 'குடம்பை''குடும்பு,கடும்பு' ஆகிய சொற்கள் குடும்ப அமைபபே பாடு தொடர்புடையவை.
□ 'குடும்பு' எனும் சொல் கூடி வாழுதல் எனறு ம் பொருள்படுகிறது.
□ **வாழிடம்**
□ சங்க இலக்கியத்தில், இல், மனை, குரம்பை, புலப்பில், முன்றில், குடில், கூரை, வரைப்பு, முற்றம், நகர், மாடம் முதலிய சொற்கள் குடும்பங்களின் வாழ்விடங்களில் உள்ள வேறுபாடுகளைச் சுட்டுகின்றன.
□ 'மனை' எனும் சொல்'நம்மனை', 'தன்மனை', எம்மனை, என சங்க இலக்கியத்தில் பல இடங்களில் வாழிடத்தைக் குறிக்கும் முதன்மைச் சொல்லாக உள்ளதை அறியலாம்.
□ **மணந்தகம்**
□ கணவனும் மனைவியும் சேர்ந்து இல்லற வாழ்வில் ஈடுபடக்கூடிய தொடக்க கட்டமே'மணந்தகம்' எனப்படுகிறது.
□ குடும்பமும் உயிர்களைப்போன்றே தோன்றி வளர்ந்து, பல நிலைகளை அடைகிறது.
□ இத்தகைய நீண்ட பாதையின் தொடக்கம் திருமணமே ஆகும்..
□ **நிறைவுரை:**
□ இல்லற வாழ்வின் இறுதிக் காலத்தில் பெருமைகள் நிறைந்த மக்களுடன் நிறைந்து, அறத்தினை விரும்பிய சுற்றத்தோடு சேர்ந்து, தலைவனும் தலைவியும் மனையறம் காத்தலே இல்வாழ்வில் பயனாகும் எனச் சங்ககால மக்கள் எண்ணினர்.
□ சங்க இலக்கியத்தின் தொடர்ச்சியாகவே இன்றைய சமூக அமைப்பு முறை தமிழ்ச் சமூகத்தின் அடையாளப் பெருமிதமாகும்.

29. **பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்துகொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.**

**முன்னுரை:** "நீடு துயில் நீக்க பாடிவந்த நிலா'' " பாட்டுத்திறத்தாலே இவ்வையத்தை பாலித்திட செய்தவர்''.
ஆம்! இப்புகழுக்கு உரியவர் நம் மகாவி பாரதி ஆவார். கடிதம் எழுதும் எவரும் தேவையைத் தாண்டி வேறெதுவும் எழுதமாட்டார். ஆனால் பாரதியின் கடிதத்திலோ, தேவையானது தனக்காக இல்லாமல் நாட்டிற்காக இருந்தது என்பதனை இக்கடிதத்தின் வாயிலாக நம்மால் நன்கு உணர முடிகிறது.
**நெல்லையப்பருக்கு:**
□ தன் உடன் பிறந்த தம்பிக்கு எழுதும் உரிமையை இக்கடிதம் உணர்த்துகிறது.
□ அவருக்கு பராசக்கி துணை இருப்பாள் என்ற வாழ்த்துதலுடன் தொடங்குகிறது பாரதியின் கடிதம்.
□ நெல்லையப்பருக்கு பல மொழி அறிவு இருப்பது ஒருவகையில் நன்மைதான். ஏனென்றால், அம்மொழியில் வெளிவந்த செய்திகளை தமிழர்க்கு உணர்த்த உதவியாக இருக்கும் என்று பாரதி தன் கடிதத்தில் கூறியிருக்கிறார்.,
□ எந்தமொழி அறிந்திருந்தாலும் அது தமிழர்க்கும் தமிழ்நாட்டிற்கும் உதவியாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் அவரின் மொழி பற்றினைக் காட்டுகிறது.
□ நெல்லையப்பரிடம் தன் மனதில் தமிழ்நாடு வாழ்க என்னும் உறுதியை ஏற்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறார். நாட்டில் உள்ள ஆணும் பெண்ணும் ஓர் உயிர் ஈருடல் போன்று கருத வேண்டும் என்று கூறியிருக்கும் கருத்தில், மனிதர்களை எவ்வளவு நேசித்திருக்கிறார் என்பது நமக்கு தெளிவாக தெரிகிறது.

☐ நாட்டில் தொழில், வணிகம், கலைகள் இவையெல்லாம் கிளைக்கிளையாய் வளர்ந்து தமிழ்நாடே உலகிற்கு எடுத்துக்காட்டான ஒரு வள நாடாகத்திகழ வேண்டும் என்று பாரதியார் விரும்பி இருக்கிறார்.

**முடிவுரை:** ஒரு சிறு கடிதத்தில் ஒவ்வொரு வரியும், வார்த்தையும் அவரின் நாட்டுப்பற்றையும், மொழிப்பற்றையும் மனித நேசிப்பையும் எவ்வாறு பறைசாற்றி நிற்கின்றன என்பதை நம்மால் நன்கு உணர முடிகிறது.

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** **1X4=4**

30. குகனோடும் ஐவர் ஆனேம்
முன்பு: பின் குன்று சூழ்வான்
மக னொடும் அறுவர் ஆனேம்
எம்முழை அன்பின் வந்த
அகன் அமர் காதல் ஐய!
நின்னொடும் எழுவர் ஆனேம்:
புகல் அருங் கானம் தந்து
புதல்வரால் பொலிந்தான் நுந்தை.

கம்பர்

www.Padasalai.Net